Vol. 4 No. 4 July 2020 E-ISSN: 2456-5571

# தமிழ் இலக்கியங்கள் வழி அறியலாகும் வஞ்சி மாநகர்

**மு.கயல்விழி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முனைவர். மு.ஞானத்தாய்**
*தமிழ்த் துறைத் தலைவர்*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்*

**முன்னுரை**

ஒரு சமுதாயம் சிறப்பானதாகத் திகழ வேண்டுமென்றால் அது பண்பட்டும், நாகரிக முதிர்ச்சியில் பிற சமுதாயத்தைவிட அறிவிற் சிறந்ததாகவும் கொள்ளப்படவேண்டும். இது போன்றதொரு துலாக் கோலைக் கொண்டே அச்சமுதாயம் எடைபோடப்படுகின்றது. மேற்சொன்ன செவ்வியல்கள் யாவும் கொண்ட சமுதாயமாகப் பழந் தமிழ்ச் சமூகம் திகழ்ந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்னே அது மேம்பட்ட சமுதாயமாகத் திகழ்ந்தது. உலகில் உள்ள பல்வேறு பண்பட்ட நாகரிகங்களான எகிப்து நாகரிகம், மொசபடோமியா நாகரிகம், சீன நாகரிகம் போன்ற நாகரிகங்களைவிட நம் நாட்டின் சிந்துச் சமவெளி நாகரிகம் சிறந்ததென ஆய்வாளர் கருதுவர். அந்த நாகரிகத்தின் வழிவந்தவர்களாகக் கருதப்படும் திராவிடர்களில் முதன்மையானவர்கள் தமிழர்கள். சிந்துச் சமவெளி நாகரிகத்துக்கும் பழந்தமிழ் நாகரிகத்துக்கும் பல்வகை ஒற்றுமை உண்டென்று ஆய்வாளர்கள் முடிபு செய்துள்ளனர். தமிழ் நாகரிகம் தன் பண்பட்ட கூறுகளைக் கொண்டு தரணியில் தலைச் சிறந்த நாகரிகம் என்பதை நிருபித்துள்ளது

தமிழகத்தின் புராதன நகரங்களில் சிறப்பானது வஞ்சி மாநகராகும். இது தலை சிறந்த கட்டமைப்பு கொண்ட மாநகராகவும் திகழ்ந்தது. வஞ்சி பழம் பெருமைமிக்க சேரர்களின் தலைநகராகும். நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் போன்றோர் இங்குத் தங்கி ஆட்சிபுரிந்தனர். இதன் புகழ் இந்தியா மட்டுமல்லாமல் மேல் நாடுகளிலும் பரவி இருந்தது. இந்நகரின் சிறப்பான கட்டமைப்புகள் உலகப்புகழ்பெற்ற சிந்துச்சமவெளி நாகரிகத்தைத் தொடர்பு படுத்துகின்றது. இன்றைய கேரளாவில் இருந்த இந்நகர் இயற்கையின் சீற்றத்தால் அழிவுற்றது. பல்வகைச் சிறப்புமிக்க வஞ்சி மாநகரைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் பாராட்டிப் பேசுகின்றன.

தமிழர்கள் உருவாக்கி அளித்த பல்வேறு நாகரிகத்தின் கூறுகள் அவர்கள் நகர நாகரிகத்தவரான சிந்துவெளி மக்களின் வழிவந்தவர்கள் என்பதை நிருபிப்பதாகவே உள்ளது. ஆனால் பழந்தமிழ் சமுதாயம் நகர நாகரிகமும் இல்லாமல், கிராம நாகரிகமும் இல்லாமல் இவ்விரண்டின் நல்லியல்புகளையும் தன்னகத்தே கொண்ட நாகரிகமாகத் திகழ்ந்தது. இது தமிழரின் மதியூகத்தை உணர்த்துவதாகவே கொள்ளவேண்டும்.

உறையூர், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, காஞ்சி, தொண்டி, முசிறி, குமரி, காயல், போன்ற நகரங்களைத் தமிழர்கள் உருவாக்கி அளித்தாலும் அமைப்பு ரீதியில் யாவற்றையும் விடச் சேரரின் தலை நகரான வஞ்சி மாநகரே முதன்மை நகராகத் திகழ்ந்தது. "வள வஞ்சி" என்று இளங்கோவடிகள் இதன் சிறப்பைச் சுட்டிச் செல்வதினின்று எளிதில் அறியலாம். வஞ்சி மாநகரை ஆராய்வதென்பது பழந்தமிழரின் நாகரிக அறிவு முதிர்ச்சியின் வெளிப்பாடான நகர நாகரிகத்தை ஆராய்வதாகவே கொள்ள வேண்டும். தொல்லியல் சான்றுகள் போதுமான அளவு கிடைக்கப்பெறாத நிலையில் இலக்கியங்கள் துணைகொண்டு வஞ்சி நகரை ஆராயும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

**சேரரின் வஞ்சி**

மலை நாட்டைச் சார்ந்த சேரரின் தலைநகராம் வஞ்சி மாநகர் ஆண்பொருநை நதிக்கரையில் அமைந்திருந்தது. அந்நதி சுள்ளியாறு, பெரியாறு, பெரியாறு என்றெல்லாம் அழைக்கப்பட்டது. இந்நதி அயிரை மலையின் மேல் தோன்றுவதால் "அயிரை ஆறு" என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறு மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றது.

**"தன்பொருநைப் புனல் பாயும்**
**வின்பெருபுகழ் விறல் வஞ்சி"** (புறம்:11)

**“வருபுனல் நீர் ஆன் பொருநை**
**சூழ் தரும் வஞ்சி”** **(சிலம்பு:29:17:14-15)**

**“வஞ்சி புறமதில் அலைக்கும்**
**கல்லென் பொருநை”** **(புறம்:387)**

**“மகளிர் பொலஞ்செய் கழங்கில் தெற்றியாடும்**
**தன்னான் பொருநை”** **(புறம்:36)**

வஞ்சி நகரம் பெரியாற்றின் வடகரையில் அமைந்திருந்தது. இந்நகரம் அந்நதிக் கரையில் கிழக்கு மேற்காக நீள் சதுரவடிவில் அமைந்திருந்தது. தாலமி (Ptolemy கி.பி. 126-61) என்ற வெளிநாட்டு பயணி இந்நகரைக் கண்டு வியந்து பாராட்டிச் சேர மன்னன் “சேரளபுத்திராஸ் (Ceralabothras) கரவ்ராவை (Karoura) ஆட்சி செய்கின்றான்” என்று கூறிச் செல்கின்றார்.[1] சேரளபுத்திராஸ் என்பது சேரர்களையும், கரவ்ரா என்பது கருவூரையும் குறிக்கும். இந்நகரம் கருவூர் என்ற பெயராலும் அழைக்கப்பட்டதை இலக்கியங்களும் உறுதி செய்யும்.

**“திருமாவியன் நகர் கருவூர் முன்துறைத்**
**தெண்ணீர் உயர்கரை குவைஇய**
**தன்னான் பொருநை மணல்”** **(அகம்:93)**

சேர மன்னர்கள் பலர் இந்நகரிலிருந்தே ஆட்சி புரிந்தனர்.

**“பூந்தன் பொருநை பொறையன் வாழி**
**மாந்தரஞ் சோன் மன்னவன் வாழ்கென”**
**(சிலம்பு:23:84-85)**

இந்நகர் மிகுந்த அழகுடையது என்று இலக்கியங்கள் செப்பும்.[2] யானைப் படையும், தேர்ப் படையும் உடைய புகழ் மிக்க சேரர்களின் தலைநகராய் இந்நகர் திகழ்ந்ததாக இலக்கியங்கள் புகழும்.[3] இளங்கோவடிகள் தாம் பிறந்த தாய் மண்ணான வஞ்சியின் சிறப்பை சிலப்பதிகாரத்தின் பலவிடங்களில் பெருமிதத்துடன் பாராட்டிச் செல்கின்றார்.

வஞ்சி மாநகர் பூவா வஞ்சி, வாடா வஞ்சி, வள வஞ்சி என்ற சிறப்பு பெயர்களுடன் அழைக்கப்பட்டது. இந்நகர் மிகவும் பழமை வாய்ந்ததென்பதை வஞ்சி மூதூர் என்ற வாசகத்தாலும், அது மாநகராய் என்பதை வஞ்சி மாநகர் என்ற வாசகத்தாலும் அம்மண்ணின் மைந்தரான இளங்கோவடிகள் மூலம் அறியலாம். இந்நகர் அகன்றது, சிறந்தது, செல்வ வளமிக்கது.[4] இடைக்காலத்தில் இந்நகர் அஞ்சைக்களம் என்றும் கொடுங்கோளூர் என்றும் அழைக்கப்பட்டது. கல்வெட்டுகள் இந்நகரை மலைநாட்டுக் கொடுங்கோளூர் என்றழைக்கின்றன.[5] மேலும் இதன் ஒரு பகுதி வஞ்சி களம், வஞ்சி குளம், அஞ்சைக் களம் என்றும் அழைக்கப்பட்டது.[6] இதன் அருகிலே புகழ் பெற்ற முசிறித் துறைமுகம் காணப்பட்டது. இந்நகரில் புகழ் பெற்ற பல சேர மன்னர்கள் தங்கி ஆட்சி புரிந்தனர். அவர்கள் வருமாறு:

1. உதியஞ் சேரலாதன்
2. நெடுஞ்சேரலாதன்
3. பல்யானைச் செல்கெழு குட்டுவன்
4. நார்முடிச் சேரல்
5. சேரன் செங்குட்டுவன்
6. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
7. அந்துவன் சேரல்
8. செல்வக்கடுங்கோ வாழியாதன்
9. பெருஞ்சேரல் இரும்பொறை
10. இளஞ்சேரல் இரும்பொறை
11. பெருஞ்சேரலாதன்
12. கணைக்கால் இரும்பொறை

**வஞ்சி மாநகரின் கட்டமைப்பு**

வஞ்சி மாநகர் சிறந்த கட்டமைப்பு கொண்டதாகவும், திட்டமிட்டுக் கட்டப்பட்டதாகவும் அமைந்திருந்தது. இந்நகர் பெரிய மதிலையும், மிகுந்த கட்டுக் காவலையும் உடையது. இதன் தெருக்கள் பெரியனவாகவும், அகலமானதாகவும் கிழக்கு மேற்காகவும் வடக்கு தெற்காகவும் நீண்டிருந்தன. இந்நகரத்தின் நேரான தெருவமைப்பு சிந்துவெளி நாகரிகத்தின் மொகஞ்சதாரோ நகரத்தின் தெருவமைப்புகளை நினைவுபடுத்துகின்றது. சேரரின் வஞ்சி நகர் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டைக்கு உள்ளேயும், வெளியேயும் மக்கள் வாழ்ந்தனர். கோட்டைக்கு உள்ளே உள்ள பகுதி அகநகர் என்றும், வெளியில் உள்ள பகுதி புறநகர் என்றும் அழைக்கப்பட்டது. கோட்டை மதில் இவ்விரண்டு பகுதிகளையும் பிரித்தது. இம்மதில் அகமதில் என்றும் புறமதில் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது. இம்மதிலின் மேல் சிலம்பும், தழையும் காணப்பட்டன. இதை,

**“செம்பொறிச் சிலம்பொரு அணிதழை தூங்கும்”**
**(பதிற்:3.3:6)**

என்று வாசகம் உணர்த்தும். இதற்கு விளக்கமளித்த பழைய உரையாசிரியர்:

“சிலம்பும், தழையும் புரிசைக் கண்தங்கின வென்றது,ஈண்டுப் பொருவீருளரேல் நும்காலிற் கழலினையும் அரையிற் போர்க்குரிய உடையினையும் ஒழித்து, இச்சிலம்பினையும் தழையினையும் அணிமின்

என அவரைப் பெண்பாலாக இகழ்ந்தவாறென்க. இனி அவற்றை அம்மதிலில் வாழும் வெற்றி மடந்தைக்கு அணியென்பாருமுளர்" என்று விளக்கமளிக்கின்றார். இந்நகரில் வழக்குரை மன்றம், பொதியில் சதுக்கம், செய்குன்று, பூங்காக்கள், அறச்சாலைகள், நீர் நிலைகள், சிவன் கோயில், திருமால் கோயில், பௌத்த சமணப் பள்ளிகளும் காணப்பட்டன.

**"அந்தரகாரிகள் அமர்ந்து இனிது உறையும்**
**இந்திரவிகாரம் என எழில் பெற்று**
**நவையறுநாதன் நல்லறம் பகர்வோர்**
**உறையும் பள்ளி" (மணி:28: 69-72)**

இது தவிரச் சேரமன்னன் வசித்த மாளிகை பொன் மாளிகை என்ற பெயருடன் காணப்பட்டது.[7] அவன் ஆட்சிபுரிந்த மண்டபம் வேத்தியல் மண்டபம் என்ற பெயருடன் அழைக்கப்பட்டது.[8] அரண்மனைக்கு அருகில் சிவன், திருமால் ஆலயங்கள் காணப்பட்டன.[9] பொன் மாளிகைக்கு தெற்கே பெரியாற்றின் கரைமேல் இன்னுமொரு மாளிகை காணப்பட்டது. அது வெள்ளி மாடம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இதைச் சூழ்ந்த பகுதி இலவந்திகைச் சோலை எனப்பட்டது. இது சேரமன்னர்களின் ஓய்வுக் கால மாளிகையாகும். சேர மன்னர்கள் தம் சுற்றத்துடன் வேனிற் காலத்தில் இம்மாளிகையில் தங்கி ஓய்வெடுத்த செய்தியை, வரலாற்று செய்திகளைத் தவறாமல் தன் பாடல்களில் குறித்துச் செல்லும் பரணரும் உறுதி செய்கின்றார்.

**"பல் பொறி மாற்ப! நின் பெயர் வாழியரோ,**
**நின் மலை பிறந்து, நின்கடல் மண்டும்**
**மலி புனல் நிகழ்தரும் தீம் நீர்விழவில்**
**பொழில் வதி வேனில் பேர் எழில் வாழ்க்கை**
**மேவரு சுற்றமொடு உண்டு இனிது நுகரும்**
**தீம்புனல் ஆயம் ஆடும்**
**காஞ்சிஅம் பெருந் துறை மணலினும் பலவே!"**
**(பதிற்: 6: 48: 12-18)**

வஞ்சி கோட்டையில் அகலமான நெடுஞ்சாலைகள் பல இருந்தன. கோட்டையில் மேற்கு வாயிலுக்குக் குடவாயில் என்று பெயர். இதை இளங்கோவடிகள் "பகல் சொல்லும் வாயில்" என்கின்றார்.[10] இதன் பக்கத்தில் குணவாயிற் கோட்டம் என்ற அறமாளிகை காணப்பட்டது. காலப்போக்கில் வஞ்சி மாநகர் அழிந்த பின்னரும் குணவாயிலும், குணவாயிற் கோட்டமும் அழியாமல் இருந்தன. இக்குணவாயிற் கோட்டத்தில் பல சமயத்தவரின் கோயில்களும், துறவிகளும், தத்துவ ஞானிகளும் வாழ்ந்தனர். இவர்களைப் பழைய உரையாசிரியர் "வஞ்சிமாநகரத்துச் சமயக் கணக்கர்" என்று உரைக்கின்றார். கோட்டையிலிருந்த குணவாயிற் கோட்டம் என்ற துறவு மடத்துக்கருகில் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் என்ற கோயில் சேரன் செங்குட்டுவனால் அமைக்கப்பட்டிருந்து.[11]அங்குக் கண்ணகியின் படம் வைத்து வழிபாடு நிகழ்த்தப்பட்டது.

இந்நகரின் மேற்கு புறத்தில் மிகப் பெரிய பௌத்த விகாரம் ஒன்று காணப்பட்டது. இதன் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவிக்கிடந்தது. கோவலனும், கண்ணகியும் இறந்தபின் கோவலனின் தந்தையான மாசாத்துவான் வாழ்க்கையை வெறுத்துப் புகார் நகர் விட்டு நீங்கி இவ்விகாரையில் தங்கித் துறவு வாழ்க்கை வாழ்ந்தான். கோவலனின் முன்னோர் ஒருவன் ஒன்பது தலைமுறைக்கு முன் இவ்விகாரத்தைக் கட்டியிருந்தான். அவன் பெயரும் கோவலன் என்பதேயாகும்.

**"நின்பொரும் தாதைக்கு ஒன்பது வழிமுறை**
**முன்னோன் கோவலன் மன்னவன் தனக்கு**
**நிங்காக் காதற் பாங்கன் ஆதலின்**
**தாங்கா நல்லறம் தானும் கேட்டு**
**முன்னோர் முறைமையினைப் படைத்ததை அன்றித்**
**தன்னான் இயன்ற தனம்பல கோடி**
**எழுநாள் எல்லையுன் இரலவர்க்கு ஈத்துத்**
**தொழுவம் புரிந்தோன் சுகதற்கு இயற்றிய**
**வானோங்கு இமயத்து வால்ஒளிச் சயித்தம்**
**ஈனோர்க்கெல்லாம் இடர்கெட இயன்றது"**
**(மணி:28:123-132)**

இப்பத்தினிக் கோட்டத்துக்கு அருகில் வைதீகச் சமயத்தவரின் வேள்விச் சாலையும் அமைந்திருந்தது. கோட்டைக்கு வெளியே அரசு விருந்தினர்கள் வந்தால் தங்கும் மிகப் பெரியதொரு விருந்தினர் மாளிகை இருந்தது. இது வேளாவிக்கோ மாளிகை என்ற பெயருடன் அழைக்கப்பட்டது.

**"பேரிசை வஞ்சி முதூர்ப் புறத்துத்**
**தாழ்நீர் வேலி தண்மலர்ப் பூம்பொழில்**
**வேளாவிக் கோ மாளிகை" (சிலம்:28:196-198)**

இந்நகரின் வடக்கே ஒரு பெரும் சோலை வனம் காணப்பட்டது. இங்கு புறநிலைக் கோட்டம் என்ற கோயில் காணப்பட்டது. இங்குச் சேரரின் புனிதச் சின்னங்களான கொற்ற வாளும், கொற்றக் குடையும் பாதுகாத்து வைத்திருந்தனர். இதனருகில் மிக உயரத்திலிருந்து நீரருவி விழும்வண்ணம் செயற்கையான நீரூற்று ஒன்று சிறப்புடன் அமைக்கப்பட்டிருந்து. வஞ்சி மாநகரில் புகாரில்

இருந்தது போன்றே காவல் தெய்வமான சதுக்கப் பூதத்தின் ஆலயம் இருந்தது.[12] இங்கு அரண்மனையில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க ஆடலரங்கு ஒன்று காணப்பட்டது. அது மணியரங்கம் என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

**வஞ்சியின் மக்கள்**

கோட்டைக்கு உள்ளே வாழ்ந்த மக்கள் அகக்குடிகள் என்றும் வெளியே வசித்தவர்கள் புறக்குடிகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

**"வேற்று மன்னரும், உழிஞைவெம் படையும்**
**போற்புறம் சுற்றிய புறக்குடி" (மணி: 28:3-4)**

கோட்டை மதிலுக்கு அடுத்துக் கோட்டைக்குள் படைவீரர் தங்கும் காவற்காடு காணப்பட்டது. இதையடுத்துப் பலவிதமான மக்கள் தங்கும் தெருக்கள் காணப்பட்டன. வாயிற் காவலர்கள், மீன் விற்போர், உப்பு விற்போர், கள் விற்போர், விறகு விற்போர், அப்ப வணிகர், இறைச்சி வணிகர், வெற்றிலை விற்போர் வசித்த தெருக்கள் தனித்தனியே காணப்பட்டன.[13] இதனைத் தொடர்ந்து கைவினைஞர் தெருக்கள் காணப்பட்டன. வெங்கலக் கண்ணார், செம்பு கொல்லர், பொற் கொல்லர், அணிமணி செய்வோர், தச்சர், சிற்பிகள், ஓவியர்கள், தோற் கருவி செய்வோர், மாலை தொடுப்போர், சோதிடர், இசை வாணர்கள், பாணர்கள், கூத்தர்கள் போன்றோர் வசித்த தெருக்களும் காணப்பட்டன.[14] இதனையடுத்து வெள்ளிச் சங்கு அறுப்போர், முத்து கோர்ப்போர், கூத்தியர்கள், சூதர்கள், மாகதர்கள், வைகாளிகர்கள், அரசரைப்பாடும் கலைஞர்கள் போன்றோரும் இங்கு வசித்து வந்தனர்.[15]

இது தவிரப் பலவிதமான நுட்பக்கலை வல்லுனர்கள், நாழிகை கணக்கர்கள், பொது மகளிர், ஆடை வடிவமைப்போர் வாழ்ந்த தெருக்களும் இந்நகரில் காணப்பட்டன. இதனையடுத்துக் கூலங்களை விற்கும் கூலக் கடைகளும் வரிசையாகக் காணப்பட்டன. இதனையடுத்துப் பொன் மதிப்பீட்டாளர்களும், நவமணி விற்கும் வணிகர்களும், வேதம் ஓதும் பார்ப்பனர்களும், அரசு குலத்தவர்களும், உயர் அலுவலர்களும் வசித்த தெருக்களும் காணப்பட்டன. இது தவிரப் பலவிதமான வல்லமையாளர்களும் வஞ்சியில் வாழ்ந்து வந்தனர். யானைகளையும், குதிரைகளையும் பழக்கும் பாகர்களும் இங்கு வசித்தனர்.

வஞ்சியின் அகநகர் போன்றே புறநகர் பகுதியும் சிறப்புடன் காணப்பட்டது. இங்குப் பல சோலைவனங்கள் காணப்பட்டன. அங்குப் பல சமயத்தவர் வசித்து வந்தனர்.

**"தேவற்குலமும், தெற்றியும், பள்ளியும்**
**பூமலர்ப் பொழிலும், பொய்கையும் மிடைந்து**
**நற்றவமுனிவரும், கற்றடங்கினரும்,**
**நன்னெறி கானிய தொன்னூற் புலவரும்**
**எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கை"**
**(மணி: 26: 72-76)**

அவ்விடத்தில் பலவித அளவைவாதிகள், சைவவாதிகள், பிரம்மவாதிகள், வைணவவாதிகள், வேதவாதிகள், அறிவுவாதிகள், நிகண்டவாதிகள், சாங்கியவாதிகள், வைசேடிகவாதிகள், பூதவாதிகள் என்று பல சமய வல்லுனர்கள் வசித்து வந்தனர். அவர்கள் துறவு வாழ்க்கை வாழ்ந்ததுடன் தம்மை நாடிவரும் மக்களுக்குத் தம் சமயக் கருத்தினைப் போதித்தும் வந்தனர். புறநகரையும், அகநகரையும் பிரிக்கும் பெரிய மதிலுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய அகழி காணப்பட்டது. அதில் எப்பொழுதும் நீர் நிறைந்து காணப்படும். நகரில் உள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர் கால்வாய்கள் கற்கள் கொண்டு மறைக்கப்பட்டுப் பாதாளச் சாக்கடையாக வடிவமைக்கப்பட்டு அந்நகரின் வெளியே உள்ள அகழியை அடைந்தது.[16] இவ்வகழியில் காராம், இடங்கர் போன்ற பயங்கர முதலைகள் வசித்து வந்தன. இது தவிரப் பலவிதமான மீன்களும் இவ்வகழியில் வாழ்ந்தன. இந்நகரில் உள்ள பெண்கள் தம் தலைமுடியை நறுமண நீர்கொண்டு கழுவி வாசம் ஏற்றிய நீர் இவ்வகழியில் உள்ள கழிவு நீருடன் வந்து கலந்தது. இந்நகரில் பலவிதமான பொய்கைகள் காணப்பட்டன. அதில் பலவகையான பொறிகள் பொருத்தப்பட்டுள்ளன. இப்பொய்கைகளின் வடிகால்கள் இப்பொறிகளால் கட்டுப்படுத்தப்பட்டன. இது விரிந்தும் சுருங்கும் இயல்பு கொண்டதாய் அமைந்திருந்தது. இந்நகரில் சேர மன்னனின் பிறந்த நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. பொதுமக்கள் பலவிதமான வண்ணக் குழம்புகளை உடலெங்கும் பூசி இவ்விழாவை உற்சாகத்துடன் கொண்டாடினர். இந்கரில் உள்ள சோலைகளில் முனிவர்கள் பலர் வசித்து வந்தனர். அவர்கள் பொதுமக்களால் நன்கு போற்றப்பட்டனர்.

**வஞ்சி மாநகரின் அழிவு**

பல நூற்றாண்டுகள் புகழ்மிக்கதாக விளங்கி வந்த வஞ்சி மாநகர் காலப்போக்கில் அழிவைச் சந்தித்தது. இது அரபிக் கடலில் மூழ்கி மறைந்தது. அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படும் பெரியாற்றின் போக்கின் காரணமாய் இந்நகர் முற்றிலுமாய் அழிந்தது. பல காலம் பெரியாறு மணலை எடுத்துக்கொண்டு வந்து சேர்த்து வஞ்சி துறைமுகத்தைத் தூர்த்துப்போகச்

செய்தது. மேலும் அடிக்கடி ஏற்படும் பெரியாற்றின் வெள்ளப் பெருக்கு இந்நகரை மிகவும் பாதித்தது. இதன் வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு சென்று நகரில் பரவி இந்நகரை அழித்தது. இச்செய்தியை,

**"கோடை நீடக் குன்றம் புல்லென"**
**அருவியற்ற பெருவற்ற கலையும்**
**நிவந்து கரையிழி தகு நனந்தலைப் பெரியாறு"**
**(பதிற்: 3: 8:8-10)**

என்று பாலை கவுதமனாரின் பாடலைக் கொண்டு அறியலாம். இந்நதியின் வெள்ளப் பெருக்கை,

**"குன்று வறங்கூரச் சுடர்சினந்திகழ**
**அருவியற்ற பெருவறற் காலையும்**
**அருஞ்செயல் பேராறு இருங்கரையுடைத்து"**
**(பதிற்:5:3:13-15)**

என்ற பாடலும் உணர்த்தும். பெரியாற்றின் விபரீதப் போக்கால் இந்நகர் அழிந்து மலைத்திட்டாகியது. இறுதியாய்க் கி.பி. 1314 இல் ஏற்பட்ட பெருமழையாலும், வெள்ளப்பெருக்காலும், கடல் கொந்தளிப்பாலும் இது முற்றிலும் அழிந்து மண்மேடாய்ப் போனது.

**முடிவுரை**

தமிழகத்தில் பண்டைய நகரங்கள் பல இருந்தன. அவை அம்மக்களின் மேம்பட்ட அறிவு முதிர்ச்சியை எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவை வாழ்ந்த காலத்தில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தன. ஆனால் பல்வேறு காரணங்களால் இந்நகரங்கள் அழிவுற்றன. இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் சான்றுகளைக் கொண்டு இவற்றைப் பற்றி அறியமுடிகிறது. அந்த வகையில் சேரர்களின் கோநகரான வஞ்சி மாநகர் திகழ்ந்தது. இந்நகர் இயற்கையின் சீற்றத்தால் அழிவுற்றது. இம்மக்கள் பின்பற்றிய தாய முறையிலான வாழ்க்கை முறையும், சிறப்பான கழிவு நீர் கால்வாய் உத்தியும் (பாதாளச் சாக்கடை), புகழ் பெற்ற சிந்துச் சமவெளி நாகரிகத்தை நினைவுபடுத்துகின்றது. உலகினில் தலைச் சிறந்த கழிவு நீர் கால்வாய் உத்தி சிந்துவெளியின் மொகஞ்சதாரோ நகரிலும், சேரரின் வஞ்சி மாநகரிலும் மட்டுமே காணமுடிகின்றது. எனவே தமிழர்கள் குறிப்பாய்ச் சேரர்கள் சிந்துவெளி மக்களின் வழித்தோன்றல்கள் என்பதை ஊகித்தறியலாம். தமிழர்களின் சிறப்பான ஆட்சி முறை, தலைச் சிறந்த நிர்வாக நலம், மதியூகமான கட்டுமானத் திறன், வெளிப்படையான சமய ஒற்றுமை, கட்டுக் கோப்பான சமுதாய வாழ்க்கை போன்றவற்றுக்குச் சான்றாய் வஞ்சி மாநகர் திகழ்ந்தது. இதன் சிறப்பான கடல் வணிகம் இதன் பொருளியல் நிலையை உயர்த்தியதுடன், தமிழகத்தின் செல்வ வளமிக்க நகராக இதை மேம்படுத்தியது.

பழங்காலத்தில் உலகம் முழுவதும் புகழ்பெற்றுத் திகழ்ந்த வஞ்சியின் பெருமையை இன்றைய தலைமுறை அறியாதது பேரிழப்பாகும். அதன் பழம்பொருட்களையும், நினைவுச் சின்னங்களையும் நன்முறையில் நம் முன்னோர்கள் பாதுகாத்து நமக்களித்துவிட்டுச் சென்றிருந்தால் அவற்றை இன்று நாம் கண்டுகளித்துப் பெருமிதப்பட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்ய இயலவில்லை. மேலும் துரதிஷ்டவசமாய் வஞ்சி நகர் குறித்த ஆய்வுகளிலும் மலையாளக் கேரள அரசு முனைப்புடன் முன்னெடுக்கவில்லை. அந்நகர் தமிழர்களின் பழம்பெருமை குறித்தது என்பதால் அதில் அவர்கள் அக்கரையும், ஆர்வமும் காட்டாது வியப்பன்று. ஆதிச்சநல்லூர், கீழடி, கொடுமணல், அழகன்குளம், பூம்புகார், கொற்கை போன்ற இடங்களில் நிகழ்த்தப்பட்டது போன்று வஞ்சியிலும் முறையான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டிருந்தால் பல உண்மைகள் வெளிப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. இதனால் வஞ்சி பற்றிய உண்மைகள் அது புதையுண்ட இடத்திலே உறங்கிக்கிடக்கின்றன. தமிழ்நாட்டில் வஞ்சி நகர் இருந்திருந்தால் அதன் தலையெழுத்து மாறி இருக்கக்கூடும். ஆனால் நிகழ்வுகள் அவ்வாறு இல்லை. இதனால் செந்தமிழ் மூதூரான வஞ்சியின் உண்மைகளும், சிறப்புகளும், பெருமைகளும் இன்னும் மண்ணுக்குள் புதைந்து உறங்கிக் கொண்டிருக்கின்றன.

**சுருக்கம் (Abbrevation):**

1. ARE-Annual Report on Indian Epigraphy
2. SII-South Indian Inscriptions

**சான்றெண் விளக்கம்:**


1. Malabar Manual, P:253
2. சிறுபாணாற்றுப் படை:396
3. மேற்படி:93
4. மேற்படி:396
5. ARE.No:313/1906
6. SII.Vol:5.No:52
7. சிலப்பதிகாரம்:28:49-50
8. மேற்படி:28:78-79
9. மேற்படி:26:62-63
10. மேற்படி:30:179
11. மேற்படி:30:168-170
12. மேற்படி:25:147

13. மணிமேகலை:28:31-34
14. மேற்படி:28:34-43
15. மேற்படி:28:49-54
16. மேற்படி:28:5-22

**பார்வை நூற்பட்டியல்**


1. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி), (2007),அகனாநூறு, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்.
2. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி), (2007),புறநானூறு, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்.
3. பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி), (2007),பதிற்றுப்பத்து,சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்
4. சிலப்பதிகாரம், (2010), சென்னை: கிழக்கு பதிப்பகம்
5. மணிமேகலை, (1969), சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
6. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.அ, (1953), சேரன் வஞ்சி, சென்னை: எடுகேஷனல் பப்ளிகேஷன் கம்பெனி
7. இராகவையங்கார்.இரா.(1934), வஞ்சி மாநகர், சென்னை: தாம்சன் அச்சுக்கூடம்.
8. புலவர் கோவிந்தன்.கா,(1998), வஞ்சி மூதூர், திருவத்திபுரம்: எழிலகம்
9. எளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, (1970), பண்டைய கேரளம், சென்னை: தமிழ் புத்தகாலயம்
10. Logan William, (1887), Malabar Manual, Thiruvananthapuram: Kerala Gazetteers Department.